## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.490/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.9.பாஸ்கரன்** |
| **Father's Name** | : பரமசிவம் |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.12.2021**

மு.வி:

நான் தற்போது தூத்துக்குடி போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.07.2013ம் தேதி செக்காணூரணி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்த போது காவல் நிலைய ஆய்வாளருடன் நானும் முதல் நிலை காவலர் மாயக்கண்ணன் என்பவரும் பன்னியான் விலக்கு அருகே ரோந்து பணிக்கு சென்றிருந்த போது செக்காணூரணி காவல் நிலைய குற்ற எண்.242-2013 பிரிவுகள் 4(1)(aaa) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் மற்றும் 41(2), 102 குற்றவியல் நடைமுறை சட்டம் வழக்கின் எதிரி பன்னியானை சேர்ந்த வயக்காட்டுச்சாமி என்பவரை கைது செய்து விசாரணை செய்ய மேற்படி வழக்கில் திருட்டு சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 09 AD பதிவெண் ஞாபகமில்லாத கிரோ கலர் ஆம்னி வேனை மறைத்து வைத்திருந்த இடத்தை காட்டுவதாக சொன்னதின் பேரில் ஈரோடு மாவட்டம், சுரம்பட்டி நான்கு ரோடு அருகே மறைத்து வைத்திருந்த வாகனத்தை அடையாளம் தனிநபர் சாட்சிகள் முன் வராத காரணத்தினால் என் முன்னிலையிலும் முதல் நிலை காவலர் மாயக்கண்ணன் முன்னிலையிலும் மேற்படி வாகனத்தை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும் முதல் நிலை காவலர் மாயக்கண்ணனும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

நாங்கள் வண்டியை கைப்பற்றிய பகுதி போக்குவரத்து அதிகம் கொண்ட பகுதி

என்றால் சரிதான். அங்கு கடைகள் உள்ளது என்றால் சரிதான். அங்கியிருந்த நபர்களிடம் நாங்கள் அத்தாட்சியில் கையெழுத்து கேட்கவில்லை என்றால் நாங்கள் கேட்டோம் அவர்கள் போட மறுத்துவிட்டார்கள். என்னோடு சாட்சி கையெழுத்து செய்த மற்றொரு நபர் என்னுடன் பணிபுரியும் காவலர் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய மேல் அதிகாரி ரவி என்றால் சரிதான். நான் சொன்னது போல் நான் சொன்ன முறையில் எதிரி வயக்காட்டுச்சாமி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் வாகனத்தை எதுவும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் அத்தாட்சி தயார் செய்தவர் என்னுடைய மேல் அதிகாரி காவல் ஆய்வாளர் சுகுமார் என்றால் சரிதான். வழக்கு சொத்தினை நானாக தயார் செய்து கொண்டோம் என்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய மேல் அதிகாரி என்ற காரணத்தினால் அவர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.